## சுருக்கம்

கைத்தறித் தொழில் – ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் – பயிற்சிக்கான தொடர் செலவினம் – 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதி ரூ.9.00 இலட்சம் ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை**

அரசாணை (நிலை) எண்.36

நாள் 26.02.2013
(நந்தன மாசி 14
திருவள்ளுவராண்டு 2044)

**படிக்கவும்:-**

1) அரசாணை (நிலை) எண்.145, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 29.09.2008.

2) அரசாணை (நிலை) எண்.135, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 31.10.2011.

3) அரசாணை (நிலை) எண்.160, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 17.07.2012.

4) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.23374/2009/ஜி3, நாள் 11.02.2013.

------

**ஆணை:–**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தின் 2012–2013–ஆம் ஆண்டிற்கான தொடர் செலவினத்தை மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்தினை நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தால் 2012–2013–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் தொடர் செலவினத்திற்காக ரூ.9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

த.தி.பா.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

" 2851–00– கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் –I திட்டத்தில் சேராதது BA கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி மையம் அமைத்தல் – 09 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை ".

(த.தொ.கு. 2851 00 103 BA 0937)

4) மேலே பத்தி 2 –இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று செலவு செய்வதற்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

5) ஈரோடு மாவட்டத்தில் நெசவாளர் பயிற்சி மைய நெசவாளர்களுக்கு பயிற்சியளிப்பது தொடர்பான தொடர் நடவடிக்கை அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை நிதித் (தொழில்கள்) துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 9152/2013 நாள் 25.02.2013–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்:-
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
மாநில தலைமைக் கணக்காயர் (A & E) சென்னை – 600 018/ (பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை – 600 018/ (பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை – 600 009
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001

**<u>நகல்:-</u>**
முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை – 600 009.
அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதித் துறை (வ.செ பொது–I, II) / வ.செ.ஒ/வ.வ/தொழில்), சென்னை – 600 009.
அரசு செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின்
தனிச் செயலர், சென்னை – 600 009
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை,
சென்னை – 600 009

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்